செ.வெ.எண். 41/ஜுன் தேதி : 17.06.2016

**பொருள்இயல் மற்றும் புள்ளியியல் துறை முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் முனைவர் வெ. இறையன்பு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் திட்ட பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**




பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, முதன்மைச் செயலர்/ஆணையர் முனைவர் வெ. இறையன்பு,இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (17.06.2016) திட்ட பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, முதன்மைச் செயலர்/ஆணையர் முனைவர் வெ. இறையன்பு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது :-

இந்திய புள்ளிஇயல் வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் கட்டப்பட்ட புள்ளிஇயல் துறை அலுவலகங்கள் உரிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்டமைக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தில் பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்ள தேர்வு செய்யப்படும் வேளாண் திடல்கள் மிக சரியாக தேர்வு செய்யுமாறும், புள்ளிஇயல் துறை அலுவலர்கள் தாங்கள் செய்யும் திட்ட பணிகளுக்கு அறிக்கை உரிய காலத்தில் அளிக்க வேண்டுமெனவும், நிர்ணயக்கப்பட்ட கால அட்டணவனைக்குள் அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

தற்போது நடைபெற்று வரும் ஜமாபந்தி நிறைவடைந்தவுடன் ஜி அறிக்கை தயார் செய்து உரிய காலத்தில் அனுப்ப வேண்டுமெனவும், 10-ம் வேளாண் கணக்கெடுப்பிற்காக புள்ளிஇயல் துறை அலவலர்கள் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் வேளாண் இணை இயக்குநருடன் ஒருங்கிணைந்து களப்பணியாளர்களுக்கு சிறப்பான பயிற்சி அளிக்குமாறும், ஒவ்வொரு அறிக்கையும் திட்டங்களின் உண்மைத் தன்மையை பிரதிபலிக்குமாறு இருத்தல் வேண்டுமெனவும், பிரதம மந்திரியின் பசல் பீமா யோஜனா குறித்த விழிப்புணர்வை விவசாயிகள் அறிந்துகொள்ளும் வண்ணம் விவசாயிகள் குறைத் தீர்க்கும் நாள் கூட்டம், அம்மா திட்டம் முகாம் மற்றும் மக்கள் தொடர்பு திட்ட முகாம்கள், பத்திரிக்கைச் செய்தி வாயிலாக மக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் விளம்பரம் செய்திட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மேலும் TNSWAN Connectivity- மாவட்டத்தில் அனைத்து புள்ளிஇயல் அலுவலகங்களிலும் இம்மாதத்திற்குள் பணிகளை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தணிக்கை செய்யப்பட்ட வரவு-செலவுகளை மாவட்ட புள்ளிஇயல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி /துறை தணிக்கை துறை அலுவலர்களை கேட்டுக்கொண்டார். தேசிய மாதிரி ஆய்வு திட்டத்தின் கீழ் நிலுவையிலுள்ள ஒரு மாதிரிக்கான களப்பணியினை இம்மாத இறுதிக்குள் முடிக்குமாறு பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல்

துறை, முதன்மைச் செயலர்/ஆணையர் முனைவர் வெ. இறையன்பு,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மண்டலப் புள்ளிஇயல் இணை இயக்குநர் திரு.கோ.இரவிக்குமார், வேளாண்மை இணை இயக்குநர் திரு.இராஜேந்திரன், புள்ளிஇயல் துணை இயக்குநர் திருமதி. ஈ.சித்ரா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி. சுசீலா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திருமதி. சித்ரா உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.